**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**132/2019

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 12.11.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | ஜாதி | : | |
| த/பெயர் | : | சிவசாமி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரரைண....**

1) இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிப்பதற்கு என்னை யார் அழைத்து வந்தார் என்றால் வாதி முத்துக்குமரன் அழைத்து வந்தார். தாவா சொத்து எப்படி எனக்கு தெரியும் என்றால்? என் வீட்டிற்கு எதிர்புறத்திலுள்ளது. சிறுவயதிலிருந்து எனக்கு தெரியும். தாவா சொத்து விவசாய நிலமாகும். தற்போது தாவா சொத்து எப்படி இருக்கிறது என்றால் விவசாயம் செய்துக்கொண்டு வருகிறார்கள்.

2) விவசாயம் செய்து, தண்ணீர் இல்லாமல் கோரை புல் மண்டி கிடக்கிறது. எத்தனை வருடங்களாக அந்த கோரைபுல் மண்டி கிடக்கிறது என்றால் கடந்த 3 மாதங்களாக மண்டி உள்ளது. பிரதிவாதியின் தகப்பானார் கணேசனை எனக்கு தெரியும். பிரதிவாதியின் தகப்பனார் தாட்கோவில் வேலை பார்த்து வந்தார். நானும் பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் தான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் பெயரிலும் கூட்டு பட்டா இருக்கிறது.

3) நான் பிரதிவாதியின் இடத்தில் குடியிருந்து வருவதால் அந்த இடத்தை பிரதிவாதி கேட்டதால் அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்பதை நிரூபணம் செய்யும்

விதமாக பட்டாவை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வாதியின் தகப்பனாருடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பெயர் என்றால் எனக்கு அவரை மட்டும் தான் தெரியும். வேறு



யாரை தெரியும். வாதிக்கு அத்தைகள் உள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து தற்போது விவசாய நிலமாக இல்லை என்றாலும், பல வருடங்களாக கோரைபுல் மண்டிக் கிடக்கிறது என்றால் சரியல்ல. வருடா வருடம் விவசாயம் செய்யும்போது தண்ணீர் வருவதை பிரதிவாதிகள் தடுப்பதால் அங்கு கோரைபுல் மண்டி விடுகிறது.

4) கடந்த 2019 ஆம் வருடத்திலிருந்து வாதி முத்துக்குமரன் நெல் சாகுபடி செய்யவில்லை என்றால் வருடம் சரியாக தெரியவில்லை. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை என்றாலும் சாகுபடி செய்து வரவில்லை என்றாலும் சரியல்ல. விவசாயம் செய்து வருகிறார். நாளது தேதி வரை தாவா வயல் புல் மண்டி கிடக்கிறது என்றால் சரிதான். உண்மை விவரங்களை மறைத்து வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் என் வீட்டிற்கு எதிர்புறத்தில் தாவா வயல் இல்லை என்றாலும், அருகில் தான் உள்ளது என்றாலும் எதிர்புறத்தில் இல்லை என்றாலும் சரிதான்.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.15 10:43:24 +0530

District Munsif
Mannargudi.